# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102002

1. District : மாவட்டம் திருநெல்வேலி PS காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு 2017 FIR No. மு.த.அ. எண் 16/2017 Date: நாள் 14.10.2017

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச Sections பிரிவுகள்: 102 Cr.PC and
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13 (2) r/w 13 (1) (d)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.10.2017 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30 hrs to Time to : நேரம் வரை 21.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2017 Time : நேரம் 12.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகம், 60 கி.மீ வடமேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ச.தங்கராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.சத்தியநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20.12.1966 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி மாவட்டம். இருப்பு திருநெல்வேலி (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1).திரு.ந.சிவகுமார், கண்காணிப்பாளர் 2) திரு.அ.நாகராஜன், இளநிலை உதவியாளர் 3)திரு.வே.ரமேஷ், ஓட்டுனர், திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் அலுவலகம், 4).திரு.கிறிஸ்டோபர், நகராட்சி பொறியாளர், 5).திரு.அயூப்கான், நகராட்சி ஆணையாளர், கடையநல்லூர் நகராட்சி, 6).திரு.மாரிச்சாமி, வருவாய் ஆய்வாளர், சங்கரன்கோவில் நகராட்சி, 7).திரு.சுலைமான், இளநிலை உதவியாளர், அம்பை நகராட்சி, 8).திரு.ஜஹாங்கீர் பாஷா, செங்கோட்டை நகராட்சி ஆணையாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 14.10.2017ம் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி கோ.மதியழகன் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தல் வைத்து தயார் செய்த செயல்முறை நடவடிக்கை நாள் 13.07.2017யும் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.தங்கராஜ், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. நான் நேற்று 13.10.2017ம் தேதி பகல் 12.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திருநெல்வேலி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி என்னுடைய தலைமையில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. Authis Rank ...Inspr.... to take up the Investigation / Refused investigation / transferred to PS..............................................on point pf jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.T.S 14/10/2017

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MATHIALAGAN,
Rank: நிலை DSP No. எண் ..........
VSAC, Tirunelveli

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

லஞ்ச ஒழிப்பு துறையினருடன் சேர்ந்து சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் பகல் 15.00 மணி முதல் இரவு 21.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை) அவர்கள் திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் சங்கரன்கோவில், புளியங்குடி, கடையநல்லூர் மற்றும் தென்காசி நகராட்சி ஆணையர்களின் தணிக்கை தடை நீக்க கூட்டமர்வு நடைபெற்று கொண்டிருந்தது. அந்த கூட்டமர்வில் மேற்படி நகராட்சிகளில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட தணிக்கை தடை செய்யப்பட்ட பத்திகளுக்கு பதில் பெற்று தணிக்கை தடை நீக்கம் அல்லது தடை நிலுவை பணி திருநெல்வேலி மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினர் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த அலுவலகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும், பல்வேறு நபர்களிடம் இருந்தும் கணக்கில் காட்டப்படாத மற்றும் கேட்பாரற்று கிடந்த பணம் ரூ.1,50,120.∴- கைப்பற்றப்பட்டது. இந்த பணமானது அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுக்கவோ அல்லது பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கைகள் நேன்று 13.10.2017 இரவு 18.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கையை இத்துடன் இணைத்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம். S.தங்கராஜ், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி 13.10.2017ம் தேதி சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.தங்கராஜ் அவர்கள் தலைமையில் தலைமையில் திடீர் தணிக்கை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: திரு.S.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. 2).திரு.கோ.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 4).திருமதி.P.சுலோச்சனா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 13.10.2017ம் தேதி மதியம் 11.30 மணிக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.தங்கராஜ் அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன் மற்றும் காவல் ஆய்வாளர்கள் திரு.R.ஆதீஸ், திருமதி.P.சுலோச்சனா மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மதியம் சுமார் 13.30 மணியளவில் புறப்பட்டு சுமார் 15.00 மணிக்கு சங்கரன்கோவில் வந்தடைந்து

சங்கரன்கோவில்- திருவேங்கடம் ரோட்டில் வடக்கு நோக்கி அமைந்துள்ள சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தின் காம்பவுண்டு மெயின் வாசல் வழியாக உள்ளே நுழைந்தவுடன் மேற்படி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் கீழ்பக்கம் TN 72 G 0319 என்ற அம்பாசிடர் கார் நின்று கொண்டிருந்தது. அதன் முன்பக்கத்தில் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் என்று எழுதப்பட்டிருந்தது. அதன் அருகே நின்றுகொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம் தெரிந்து கொண்ட ஓட்டுனர் ரமேஷ் என்பவர், தான் அந்த வாகனத்தின் ஓட்டுனர் என்றும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.2,460/-ம் பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.17,000/- இருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் பற்றி அவர் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேற்படி காரை சோதனை செய்தபோது பணமோ ஆவணங்களோ இல்லை.

மேற்படி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மெயின்வாசல் உள்ளே நுழைந்தபோது வாசலின் மேற்குபக்கம் போட்டிருந்த பெஞ்சில் இருவர் உட்கார்ந்திருந்தனர். பின்னால் பெயர் விபரம் கேட்டு தெரிந்து கொண்ட திரு.சிவகுமார் தான் திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகத்தில் பொதுப்பிரிவு கண்காணிப்பாளராக இருப்பதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் இருந்து கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.7,000/- இருந்தது. அவரது பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்தபோது பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.18,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தகுந்தமுகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. பின்னால் தெரிந்து கொண்ட மற்றொரு நபரான நாகராஜனை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.9,500/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது.

மேற்படி நபர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரே கட்டிடத்தின் வடமேற்கு மூலையில் அமைந்திருந்த வரிவசூல் செய்யும் அறைக்குள் இருந்த பின்னால் தெரிந்துகொண்ட திரு.மாரியம்மாளை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சுலோச்சனா சோதனை செய்தபோது அவரது கைப்பையில் ரூ.4,800/- இருந்தது. வங்கியில் இருந்து எடுத்த ஆதாரத்தை காண்பித்ததால் அந்த பணத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்றைய வரிவசூல் பற்றி கேட்க ரூ.2,62,355/-க்கு காசோலையாகவும், ரொக்கமாக ரூ.1,19,241/- இருப்பதாக தெரிவித்தார். மேற்படி

பணப்பதிவேட்டோடு சரிபார்த்தபோது அது சரியாக இருந்தது. மேற்படி ரூ.2,62,355/-க்கு காசோலையாகவும், ரொக்கம் ரூ.1,19,241/- பணத்தையும் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக தினசரி வருவாய் ஆன்லைனில் இருந்து பதிவறை எழுத்தர் பொறுப்பு காசாளர் திருமதி.மாரியம்மாள் எடுத்து அத்தாட்சி செய்து ஒப்படைத்தார்.

நகராட்சி கட்டிட ஹாலின் கீழ்பக்கத்தில் ஆணையாளர் அறை இருந்தது. அந்த அறையில் திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் திரு.ராஜன் அமர்ந்திருந்தார். அவரையும், அவரது இருக்கையையும் சோதனை செய்தபோது அவரது மணிப்பர்சில் ரூ.500/- இருந்தது அது அவரது சொந்தப்பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரிடம் விசாரித்போது முற்பகலில் திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட 20 நகராட்சி ஆணையர்களின் மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்றதாகவும், அதன்பின்னர் தணிக்கை கூட்டமர்வு நடைபெற்று வருவதாகவும், தான் இந்த அறையில் சாப்பிட்டுவிட்டு செல்வதற்காக வந்ததாக தெரிவித்தார்.

ஆணையாளர் அறையின் தென்புறம் இன்வெர்ட்டர் பேட்டரி அறையும், அதன் தென்புறம் கணினி அறையும், அதனை அடுத்து பொதுப்பிரிவும், அதற்கு எதிரே மேற்புரம் பொது சுகாதார பிரிவும், அதற்கு வடபுறம் பொறியில் பிரிவும், அதற்கு வடபுறம் ஓவர்சீயர் அறையும், அதன் வடபுறம் பொறியாளர் அறையும், அதனை அடுத்து உள்ளே வரி வசூல் செய்யும் இடமும் அமைந்துள்ளது. கீழ் தளத்தின் கடைசியில் கீழ்புறம் பாத்ரூமும், அதன் எதிர்புறம் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. தரைதளத்தில் உள்ள பொதுப்பிரிவில் வைத்து நகராட்சிகளின் தணிக்கை கூட்டமர்வு திருநெல்வேலி மண்டல இணை இயக்குனர், உள்ளாட்சி தணிக்கை திரு.A.மீரா கனி தலைமையில் நடைபெற்று வந்தது. இதில் திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் திரு.ராஜன் மற்றும் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களின் கூட்டமர்வு நடந்து வருவதாக திருநெல்வேலி மண்டல இணை இயக்குனர், உள்ளாட்சி தணிக்கை திரு.A.மீரா கனி கூறினார். இதில் திருநெல்வேலி மண்டல உள்ளாட்சி தணிக்கை சார்பில் உதவி இயக்குனர் திரு.க.முருகையா, ஐந்து ஆய்வாளர்கள் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் ஆகியோர் தணிக்கை செய்து கொண்டிருந்தனர். இன்று கடையநல்லூர், சங்கரன்கோவில், புளியங்குடி, தென்காசி ஆகிய நகராட்சிகளில் உள்ள தலா 195 பத்திகள், 100 பத்திகள், 100 பத்திகள், 150 பத்திகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தணிக்கை தடைகளுக்கு அறிக்கை பெற்று சரிபார்த்து தணிக்கை தடைகளை நீக்கம் செய்யவும் அல்லது நிலுவையில் வைக்கவும் ஆய்வாளர்களால் குறிப்பு எழுதி பரிந்துரை செய்யப்பட்டு உதவி இயக்குனரால் மீண்டும் சரிபார்க்கப்பட்டு பின்பு இணை இயக்குனரால் முடிவு செய்யப்படும் என்று திரு.மீரா கனி கூறினார்.

திருநெல்வேலி மண்டல கூட்டமர்வில் கடையநல்லூர் நகராட்சி சார்பில் 195 பத்திகள் தணிக்கை தடைகளுக்கு ஆணையாளர் திரு.அயூப்கான் தலைமையில் 9 பேர்களும், புளியங்குடி நகராட்சி சார்பில் 100 பத்திகள் தணிக்கை தடைகளுக்கு மேலாளர் திரு.சண்முகவேல் தலைமையில் ஏழு பேர்களும், தென்காசி நகராட்சி சார்பில் 150 பத்திகள் தணிக்கை தடைகளுக்கு ஆணையாளர் திரு.ஏகராஜ் தலைமையில் 10 பேர்களும், சங்கரன்கோவில் நகராட்சி சார்பில் 100 பத்திகள் தணிக்கை தடைகளுக்கு ஆணையாளர் திரு.தானுமூர்த்தி மற்றும் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலர்களும் கூட்டமர்வில் கலந்து கொண்டனர்.

நகராட்சி அலுவலகத்தில் இருக்கும் பொதுப்பிரிவில் உள்ளே நுழைந்தபோது வலது பக்கத்தில் திருநெல்வேலி நகராட்சிகளின் கூட்டமர்வு திருநெல்வேலி மண்டல இணை இயக்குனர் திரு.A.மீராகனி மற்றும் உதவி இயக்குனர் திரு.க.முருகையா ஆகிய இருவரும் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தனர். அவர்களையும், அவர்களது இருக்கைகளையும் சோதனையிட்டதில் கூட்டமர்வு பதிவேட்டில் குறிப்பிட்ட பணத்தை தவிர வேறு பணம் இல்லை. அப்போது கடையநல்லூர் நகராட்சி பொறியாளர் திரு.கிறிஸ்டோபர் மேற்படி அறையின் தென்கிழக்கு மூலையை நோக்கி நடந்து சென்றவர் அந்த மூலையில் தன்னுடைய சட்டைப்பையில் இருந்த பணத்தை எடுத்து கீழே வீசிவிட்டு அவர் இருந்த இடத்தை நோக்கி வந்தார். சந்தேகத்தின்பேரில் அவரை சோதனை செய்து பார்த்தபோது அவரது சட்டைப்பயில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.5,020/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.5,020/- கைப்பற்றப்பட்டது. அவர் வீசி எறிந்த இடத்திற்கு சென்று அதில் கத்தையாக கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.6,400/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்க அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.6,400/- கைப்பற்றப்பட்டது.

மேற்படி அறையின் வடபக்க நுழைவு வாசலின் கீழ்பக்கம் இருந்த மேஜையின் அருகில் நின்றுகொண்டிருந்த வருவாய் ஆய்வாளர் திரு.மாரிச்சாமியை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் இருந்து இரண்டு கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது முதல் கத்தையில் ரூ.7,500/-ம், இரண்டாவது கத்தையில் ரூ.6,000/-ம் இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது.

மேற்படி மேஜையின் தெற்கு பக்கத்தில் உள்ள நாற்காலியில் வடக்கு நோக்கி உட்கார்ந்து கொண்டிருந்த தென்காசி நகராட்சி ஆணையாளர் திரு.அயூப்கான் என்பவரை சோதனை செய்தபோது அவரது சட்டைப்பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.4,550/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம்

கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.4,550/- கைப்பற்றப்பட்டது.

மேற்படி மேஜைக்கு கீழ்ப்பக்கம் இருந்த முதல் இருக்கையில் மேற்கு நோக்கி அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த தணிக்கை ஆய்வாளர் திரு.ந.ரமேஷ் மற்றும் தணிக்கை துணை ஆய்வாளர் திருமதி.கி.மல்லிகா ஆகிய இருவரும் தென்காசி நகராட்சி தணிக்கை தடைக்குரிய பதில்களை சரிபார்த்து குறிப்பு எழுதிக்கொண்டிருப்பதாக கூறினார்கள். அவர்களையும் அவர்களது இருக்கைகளையும் சோதனையிட்டதில் கூட்டமர்வு பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த முறையே ரூ.600/- மற்றும் ரூ.110/- பணத்தை தவிர வேறு ஏதும் இல்லை. அவர்களது இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த தென்காசி நகராட்சி ஊழியர்களை சோதனை செய்து பார்க்க அவர்களிடம் அவர்களது சொந்த பணத்தை தவிர வேறு பணம் இல்லை.

மேற்படி மேஜையின் தெற்கு பக்கம் மேற்கு நோக்கி அமர்ந்திருந்த பின்னால் பெயர் விபரம் கேட்டு தெரிந்த தணிக்கை ஆய்வாளர் திரு.சு.சந்தனகுமார் மற்றும் தணிக்கை ஆய்வாளர் திரு.செ.பாரதி ஆகிய இருவரும் கடையநல்லூர் நகராட்சி தணிக்கை தடைக்குரிய பதில்களை சரிபார்த்து குறிப்பு எழுதிக்கொண்டிருந்தனர். அவர்களையும் அவர்களது இருக்கைகளையும் சோதனையிட்டதில் கூட்டமர்வு பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த முறையே ரூ.510/- மற்றும் ரூ.250/- பணத்தை தவிர வேறு ஏதும் இல்லை. அவர்களது இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த கடையநல்லூர் நகராட்சி ஊழியர்களை சோதனை செய்து பார்க்க அவர்களிடம் அவர்களது சொந்த பணத்தை தவிர வேறு பணம் இல்லை.

மேற்படி மேஜைக்கு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்து கொண்ட மூன்றாவது மேஜையில் தணிக்கை ஆய்வாளர் திரு.பு.ரமேஷ் என்பவர் சங்கரன்கோவில் நகராட்சி தணிக்கை தடைக்குரிய பதில்களை சரிபார்த்து குறிப்பு எழுதிக்கொண்டிருந்தார். அவரையும், அவரது இருக்கையும் சோதனையிட்டதில் கூட்டமர்வு பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த ரூ.565/- பணத்தை தவிர வேறு ஏதும் இல்லை. அவரது இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு.தாணுமூர்த்தி மற்றும் ஊழியர்களை சோதனை செய்து பார்க்க அவர்களிடம் அவர்களது சொந்த பணத்தை தவிர வேறு பணம் இல்லை.

மேற்படி மேஜைக்கு சற்று தெற்கே மேற்கு பக்கம் நான்காவது மேஜையில் வடகு நோக்கி அமர்ந்திருந்த பின்னர் பெயர் விபரம் தெரிந்து கொண்ட தணிக்கை ஆய்வாளர் திரு.க.மணிமாறன் என்பவர் புளியங்குடி நகராட்சி தணிக்கை தடைக்குரிய பதில்களை சரிபார்த்து குறிப்பு எழுதிக்கொண்டிருந்தார். அவரையும், அவரது

இருக்கையும் சோதனையிட்டதில் கூட்டமர்வு பதிவேட்டில் குறிப்பிட்டிருந்த ரூ.230/- பணத்தை தவிர வேறு ஏதும் இல்லை. அவரது இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த புளியங்குடி நகராட்சி ஊழியர்களை சோதனை செய்து பார்க்க அவர்களிடம் அவர்களது சொந்த பணத்தை தவிர வேறு பணம் இல்லை.

அவர்களுடன் நின்று கொண்டிருந்த அம்பை நகராட்சியை சேர்ந்த இளநிலை உதவியாளர் திரு.சுலைமானை சோதனை செய்து பார்த்த போது அவருடைய சட்டைப்பையில் கத்தையாக பணம் வைத்திருந்தார். அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.35,040/- இருந்தது. அந்த பணத்திற்கு அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அம்பை நகராட்சிக்கு இன்று தணிக்கை தடை பணிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படாத பட்சத்தில் அம்பை நகராட்சியை சேர்ந்த பணியாளர் ஏன் நிற்கிறார் என அவரிடம் விசாரித்தபோது அவர் அம்பை நகராட்சி ஆணையாளர் திரு.முருகேசன் அவர்கள் ஏற்கனவே இதற்கு முன்பு புளியங்குடி நகராட்சி ஆணையாளராக பணிபுரிந்தபோது ஏற்பட்ட தணிக்கை தடைகள் சம்மந்தமாக ஆணையாளர் திரு.முருகேசன் தன்னை சம்மந்தப்பட்ட புளியங்குடி நகராட்சி ஊழியர்களுடன் சேர்ந்து மேற்படி தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய அறிவுரை கொடுத்துவிட்டு சென்றதாக தெரிவித்தார். இது சம்மந்தமாக புளியங்குடி நகராட்சி மேலாளர் திரு.சண்முகவேல் என்பவரை விசாரித்தபோது அவர் மேற்படி சுலைமான் தன்னிடம் ஆணையர் திரு.முருகேசன் காலகட்டத்தில் எத்தனை தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் கேட்டிருந்தார் என்று கூறினார். இது சம்மந்தமாக திருநெல்வேலி மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கை இணை இயக்குனர் என்பவரிடம் விசாரித்போது 15 பத்திகள் தணிக்கை தடை செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு புளியங்குடி நகராட்சி சார்பில் பதில் கொடுத்துள்ளதாகவும், அந்த பதிலுக்கு தணிக்கை ஆய்வளர் திரு.மணிமாறன் அவர்கள் பொறுப்பு விடுவித்து அறிக்கை கொடுத்துள்ளதாகவும், இதற்குமேல் உதவி இயக்குனர் பரிசீலனை செய்து தன்னுடைய முடிவுக்காக சமர்ப்பிப்பார் என்றும் கூறி அந்த தணிக்கை தடை பத்திகளுக்கு நகல் எடுத்து ஒப்பம் செய்து கொடுத்ததை கைப்பற்றப்பட்டது.

மேற்படி பொதுப்பிரிவிற்கு மேற்புரம் இருந்த சுகாதாரபிரிவு அறையினை சோதனை செய்தபோது அந்த அறையில் பலர் உட்கார்ந்தும், நின்று கொண்டும் இருந்தனர். அதில் மேற்கு பக்கத்தில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கிர் பாஷா என்பவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து மணிப்பர்சை சோதனை செய்தபோது ரூ.3,650/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரது அருகே தெற்கு பக்கம் இருந்த

மரரேக்கை சோதனையிட்டபோது அதில் இருந்த ஆவணங்களுக்கிடையே கத்தையாக இருந்த பணத்தை எடுத்தபோது அதனுள் ஒரு சிகப்பு SanDisk 8 G.B பென்டிரைவும் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்த போது அதில் ரூ.24,000/- இருந்தது. மேற்படி பென்டிரைவை பற்றி அங்கிருந்த ஊழியர்களிடம் கேட்டபோது யாரும் தனக்குரியது என்று சொல்லவில்லை. மேற்படி பென்டிரைவை லஞ்ச ஒழிப்பு பிரிவு மடிக்கணிணியில் போட்டு சோதனை செய்தபோது அதில் சென்னை உயர்நீதிமன்ற W.P.No.2689 of 2017-க்கு எதிர்மனுதாரரான நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா Counter Affidavit தயார் செய்தது இருந்தது. அதில் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையளராக திரு.ஜஹாங்கீர் பாஷா தயார் செய்ததாக இருந்தது. இது பற்றி மேற்படி அறையில் இருந்த செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா கேட்டபோது அவர் அது தன்னுடைய பென்டிரைவ் என்று சொன்னார். அவரிடம் அந்த பென்டிரைவ் உடன் இருந்த பணம் ரூ.24,000/- குறித்து அவரிடம் கேட்டபோது தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருக்கு மேற்கு பக்கம் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அதன்கீழே பணக்கத்தை கிடந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.4,000/- இருந்தது. அதற்கும் அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் அதனையும் சேர்த்து கைப்பற்றப்பட்டது.

பின்பு கிழக்கு பக்கம் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த தென்காசி நகராட்சி ஆணையாளர் திரு.ஏகராஜ் சோதனை செய்தபோது அவரது மணிப்பர்சில் ரூ.380/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி கேட்டபோது அவர் தனது சொந்தபணம் என்று சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது.

அந்த அறையில் நின்று கொண்டிருந்த மற்ற ஊழியர்களான திரு.நாகூர்மீரான் பிள்ளை அன்னாவியை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.470/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தபணம் என்று சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தென்காசி நகராட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியனை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.6,500/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் ஏ.டி.எமில் இருந்து இன்று மதியம் பணம் எடுத்ததை காண்பித்ததால் அந்த பணத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. புளியங்குடி நகராட்சி கணக்கர் திரு.புஷ்பநாதன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.5,330/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது தீபாவளிக்கு துணி எடுக்க கொண்டுவந்ததாக சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தென்காசி நகராட்சி வருவாய் ஆய்வளர் திரு.ஞானப்பாவை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.2,160/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தபணம் என்று

சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.முகமது யூசுப் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.4,700/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தபணம் என்றும், வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது என்று சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சங்கரன்கோவில் நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.வெங்கட்ராமனை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,000/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தபணம் என்று சொன்னதன்பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அறையின் வடக்கு பக்கம் பொறியியல் பிரிவில் ஊழியர்கள் யாரும் இல்லை. மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அதற்கடுத்த வடக்கு பக்கம் இருந்த பொறியாளர் அறையில் யாரும் இல்லை. மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேல் தளத்தில் உள்ள அறைகள் மற்றும் கூட்ட அரங்கத்தில் நபர்கள் யாரும் இல்லை. சோதனை செய்து பார்த்ததில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு.தாணுமூர்த்தியிடம் பணியாளர்களின் கையிருப்பு பணப்பதிவேட்டை பற்றி கேட்டபோது அது பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். மேற்படி அலுவலக ஊழியர்கள் மற்றும் செங்கோட்டை நகராட்சி ஆணையாளரிடம் கைப்பற்றப்பட்ட மற்றும் கேட்பாரற்று கிடந்த பணம் மேற்படியாளர்கள் லஞ்சமாக அதிகாரிகளுக்கு கொடுக்கவோ அல்லது பொது மக்களிடம் லஞ்சமாக பெற்ற பணமாகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் மொத்த பணம் ரூ.1,50,120/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (13.10.2017) மாலை 18.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். S.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு திருநெல்வேலி ஒப்பம்.மற்றும் பலர்.

Sir, Received the complaint on 14.10.17 at 12.15 hrs made Preliminary Enquiry and registered a case in Titunelveli V&AC, Cr.No.16/2017 u/s 102 CrPC and 13(2) r/w 13(1) (d) of the Prevention of Corruption Act 1988 on 14.10.17 at 13.15hrs. sd.G.Mathialagan, DSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi and Kanyakumari District at Tirunelveli and original FIR were sent to the Hon'ble Judicial Magistrate-I, Tirunelveli i/c Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

14/10/17
G.MATHIALAGAN,
DSP, V&AC,
Tirunelveli.